# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2379/29 - 2024 අප්‍රේල් මස 10 වැනි බදාදා - 2024.04.10

*2379/29 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2000 இன்49 ஆம் இலக்க திருத்திய 1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் கீழான இடைக்கால அபிவிருத்திக் கட்டளை***

*2000 இன் 49 ஆம் இலக்க திருத்திய 1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையில் காணப்படுகின்ற 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் பிராந்திய அபிவிருத்திப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகளின் பௌதீக அபிவிருத்தி சம்பந்தமாக (இங்கு இதனகத்து "பொது இடைக்கால" அபிவிருத்திக் கட்டளை என்றழைக்கப்படும்) பொது "கட்டளை" ஐ இந்த அறிவித்தல் மூலம் பிரகடனம்செய்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க** (பா.உ),
*நகர அபிவிருத்தி மற்றும்வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*செத்சிறிபாய கட்டம் II,*
*பத்தரமுல்ல,*
*2024, ஏப்பிறல் 02.*


1A - G 41754 — 64 (2024/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

*1. இக்கட்டளை 2024 நாடு நகரத்திட்டமிடல் (பொது இடைக்கால அபிவிருத்திக் கட்டளை) என்றழைக்கப்படும்.*

*2. இந்தக் கட்டளை (1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான) கட்டளைச் சட்டம் மற்றும் திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தயார் செய்யப்படுகின்ற விரிவான திட்டங்களுக்கு ஏற்புடையதாகின்ற கிழக்கு மாகாணத்தின்பிராந்திய அபிவிருத்தி பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகளுக்கு ஏற்புடையதாக இருக்கும்.*

*3. கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படவுள்ள திட்டம் சம்பந்தமான யாதாயினுமொரு பிரதேசத்தின் இடைக்கால அபிவிருத்தி தொடர்பாக விசேட இடைக்கால அபிவிருத்தி விதித்துரைக்கப்படுகின்ற பட்சத்தில், குறித்த விசேட கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு யாதாயினும் மாற்றம் செய்தலுக்கு உட்பட்டு, ஏதெனுமொரு வகையில் இந்தக் கட்டளையின் ஏற்பாடுகள், மேற்படி காணிகள் தொடர்பில் ஏற்புடையதாக இருக்கும்.*

*4. இந்தக் கட்டளைகள் ஏற்புடையதாகின்ற யாதாயினுமொரு காணியின் இடைக்கால அபிவிருத்திக்கான பொறுப்பைக் கொண்டுள்ள அதிகாரியாக (இங்கு இதனகத்து, "இடைக்கால அபிவிருத்தி" அதிகாரி என்றழைக்கப்படுகின்ற),*

*(அ) குறித்த காணி யாதாயினுமொரு பிரதான வீதி அபிவிருத்திப் பிரதேசத்தில் அமைந்திருப்பின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் இருப்பார் என்பதுடன்,*

*(ஆ) 'அ' உப பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள யாதாயினுமொரு அபிவிருத்தி பிரதேசத்திற்குள் குறித்த காணி அமைந்திருக்கவில்லை எனின், மேற்படி காணி அமைந்திருக்கின்ற நிருவாக எல்லைகளை உள்ளடக்கிய பிராந்தியத்திற்கு கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற பிராந்திய திட்டமிடல் குழுவின் (இங்கு இதனகத்து "திட்டமிடல் அதிகாரி" என்றழைக்கப்படுகின்ற) கண்காணிப்பின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் நாற்பத்து ஐந்தின் (45) பிரதேச செயலாளர்களாக இருத்தல் வேண்டும்.*

*5. இக்கட்டளையின் 2 ஆம் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள யாதாயினுமொரு வகையைச் சேர்ந்த அல்லது விபரத்துக்கு ஏற்புடையதாகின்ற அபிவிருத்தியொன்றாகக் கருதப்படக்கூடிய இடைக்கால அபிவிருத்தி இந்தக் கட்டளைக்கு ஏற்புடையதாகின்ற யாதாயினுமொரு காணிக்கு அல்லது காணியினுள்அல்லது காணி தொடர்பில் அமுல்படுத்தப்பட முடியும்.*

*6. இக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினுமோரு ஏற்பாடுகளின் மூலம் குறித்த பிராந்தியத்திற்கு ஏற்புடையதாகின்ற யாதாயினுமொரு விசேட இடைக்கால அபிவிருத்தி கட்டளைகளின் மூலம் அல்லது அதிகாரியினால் குறித்த யாதாயினும் ஏற்பாடொன்றில் அதிகாரியாக குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரியினால் ஆக்கப்படுகின்ற திட்டத்திற்கு குறித்த பிரதேசத்திற்குள் இடைக்கால அபிவிருத்திகளை ஒழுங்குறுத்துவது தொடர்பாக, பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர் ஒருவரினால் வெளியிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் மூலம் தத்துவமளிக்கப்பட்டாலொழிய, வேறு யாதாயினுமொரு எழுத்து மூலமான சட்டத்தில், எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், எந்தவொரு அபிவிருத்திப் பிராந்தியத்திற்கும் திட்டமொன்றை தயார் செய்வதற்கான கட்டளைகள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்ற திகதி முதல் ஆரம்பித்து, அவ்வாறு தயார் செய்யப்பட்டுள்ள திட்டம் அமுலுக்கு வரும் திகதிகளில் நிறைவடையும் கால எல்லைக்குள், யாதாயினுமொரு சந்தர்ப்பத்தில், யாராயினுமொரு ஆளினால்,*

*(அ) மேற்படி பிரதேசத்தில் எந்தவொரு கட்டிடத்தையும் நிர்மாணித்தல், மீள்நிர்மாணித்தல், இடித்து அகற்றல், மாற்றம் செய்தல் அல்லது புனரமைப்புச் செய்தல்அல்லது ;*

*(ஆ) மேற்படி பிரதேசத்திற்குள் அமைந்துள்ள யாதாயினுமொரு வீதியை திட்டமிடல், நிர்மாணித்தல், விரிவுபடுத்தல், நீடித்தல் அல்லது மூடிவிடத் திட்டமிடல், நிர்மாணித்தல், விரிவுபடுத்தல், நீடித்தல் அல்லது மூடிவிட முயற்சித்தல் அல்லது ;*

*(இ) காணியின் ஒரு பகுதியை தனியான உரித்தாக மாற்றக்கூடிய வகையில், அப்பிரதேசத்தின்எந்தவொரு காணியையும் அபிவிருத்தி செய்தல் அல்லது உப பிரிவிடல், சாட்டுதல் செய்தல், பயன்படுதல் அல்லது வேறு வகையில் நீக்கம் செய்தல் அல்லது கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு ; எந்த வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது.*

*அவ்வாறு செய்வதற்கு அங்கீகாரம் இல்லை எனின், இக்கட்டளையில் உள்ளடங்கும் ஏதேனும் உத்தரவின் மூலம் அப்பிரதேசத்திற்கு ஏற்புடையதான யாதாயினும் விசேட இடைக்கால அபிவிருத்திக் கட்டளை மூலம் அல்லது இந்த உரிமப்பத்திரத்தைப்*

பெற்றுக்கொடுக்கும் அதிகாரி அல்லது அலுவலர் அல்லது அவ்வாறான யாதாயினும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரி அல்லது அலுவலர் திட்டம் தயார் செய்யப்படவுள்ள பிரதேசத்தின் காணியின் இடைக்கால அபிவிருத்தியை ஒழுங்குறுத்துவதற்கு பொறுப்புக்கூறல்வேண்டும்.

7. 06 ஆவது பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள், யாதாயினுமொரு சந்தர்ப்பத்தில், மேற்படி பிரிவின் குறித்த பிரிவில் அல்லது குறித்த பிரதேசத்திற்கு ஏற்புடையதாகின்ற மேற்படி கட்டளையின்யாதாயினுமொரு ஏற்பாட்டினை மீறி யாதாயினுமொரு அபிவிருத்திப் பிரதேசத்தில் யாதாயினுமொரு காணி அல்லது கட்டிடம் அல்லது அது தொடர்பில் யாதாயினுமொரு நடவடிக்கையை அமுல்படுத்தக் காரணமாக அமைகின்ற அல்லது அங்கீகாரம் வழங்கப்படுகின்ற யாதாயினுமொரு செயற்பாட்டை அவர் அமுல்படுத்துவதன் மூலம், கட்டளைச் சட்டத்தின் 81 ஆம் பிரிவின் கீழ் யாராயினும் ஆளொருவர் குற்றவாளியாவார் என்பதுடன், அதிகாரியினால் அல்லது குறித்த பிரதேசத்திற்குள் இடைக்கால அபிவிருத்தியை ஒழுங்குறுத்துவது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலரினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கையின் பேரில், குறித்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள், மேற்படி நிர்மாணிப்பை மாற்றம் செய்யுமாறு அல்லது இடித்து அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிடப்பட முடியும்.

8. 07 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட நீதிமன்ற உத்தரவின் மூலம், குறித்த கட்டிடத்தை மாற்றம் செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு அல்லது இடித்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாராயினும் ஆள் ஒருவருக்கு உத்தரவிடப்பட்டுள்ள பட்சத்தில், குறித்த கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்த நபர் நடவடிக்கை மேற்கொள்ளாத பட்சத்தில், குறித்த கட்டிடத்தை மாற்றம் செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு அல்லது இடித்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவை வெளியிடக் காரணமான கோரிக்கையை சமர்ப்பித்துள்ள அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு இயலுமாகும். அவ்வாறு மாற்றம் செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு அல்லது இடித்து விடுவதற்கு தாங்கிக்கொள்ளப்பட்ட சகல செலவினங்களும் பிரதானமாக குறித்த நபரின் ஆதனம் மீதான பொறுப்பொன்றாக இருக்கும் என்பதுடன், ஒழுங்குவிதிகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளவாறு குறித்த நபரிடமிருந்து மீள அறவிட்டுக்கொள்ளப்பட முடியும்.

9. இக்கட்டளையின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதெனுமொரு அபிவிருத்தி நிருவாகம், மேற்படி வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டளைச் சட்டத்தின் கீழான மேம்படுத்தல் வலயமயப்படுத்தல் துணைச் சட்டங்கள் மற்றும்/அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழான திட்டங்கள் மற்றும் கட்டிட ஒழுங்குவிதிகளும், (ஏற்கெனவே அமுலில் இருப்பின் இடைக்கால அபிவிருத்தி அதிகாரியினால் பிரதேச அபிவிருத்திப் பிரதேசமாக, இக்கட்டளையின் 2 ஆம் பிரிவின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு பிரதேசத்திற்குள் ஏற்படுகின்ற சகல காணிகளுக்கும் அமுல்படுத்தப்பட முடியும்.

10. வேறு யாதாயினுமொரு துணைச்சட்டம்அல்லது வேறு யாதாயினுமொரு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி அதற்கு முரணாக எந்த விடயத்தைக்குறிப்பிடுகின்ற போதிலும், இக்கட்டளையின்ஏற்பாடுகள்அவ்வாறே தத்துவமுள்ளதாக இருக்கும். அவ்வாறான ஏற்பாடுகளுக்கு இடையே யாதாயினும் மோதல் அல்லது இணங்கியொழுகாமை காணப்படாத பட்சத்தில், 9 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேறு யாதாயினும் துணைச்சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளை விஞ்சி "இடைக்கால அபிவிருத்திக் கட்டளை" தத்துவமுள்ளதாகக் காணப்படும்.

11. இக்கட்டளை ஏற்புடையதாகின்ற யாதாயினுமொரு காணியை அபிவிருத்தி செய்வதற்காக கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை யாராயினுமொரு இடைக்கால அபிவிருத்தி அதிகாரி ஊடாக யாராயினும் ஆளொருவருக்கு விநியோகிக்க முடிவது பின்வரும் சந்தர்ப்பங்களிலாகும்.

(அ) குறித்த அபிவிருத்தி அதிகாரி, குறித்த காணிக்கான இடைக்கால அபிவிருத்தி அதிகாரியாதல்.

(ஆ) குறித்த நபரினால், அது தொடர்பில் எழுத்து மூலமான விண்ணப்பப்படிவம், குறித்த அபிவிருத்தி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் மற்றும் குறித்த விண்ணப்பப்படிவத்துடன், குறித்த காணியை (இங்கு இதனகத்து "அமைவிடத் திட்டம்" என்றழைக்கப்படுகின்ற) இனங்காண்பதற்கு போதியளவான வகையில் தயார் செய்யப்பட்ட நில வரைபடத்தின் 3 பிரதிகளையும், உத்தேச அபிவிருத்தியை வெளிப்படுத்திக்காட்டுகின்ற வகையிலான நிலவரைபடம் மற்றும் வரைபடம் மூலம் தெளிவுபடுத்தப்பட்ட விபரமும், சமர்ப்பித்தல். அவ்வாறாயினும், குறித்த ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரம் மற்றும் அமைவிடத் திட்டம் தவிர நிலவரைபடம் மற்றும் வரைபடத்தை சமர்ப்பிப்பது அவசியம் என்பது இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாக இருக்காது.

(இ) அவ்வாறானதொரு அபிவிருத்தியை, பிராந்திய திட்டமிடல் குழுவினால், பருமட்டான பிராந்திய திட்ட வரைவில் உட்புகுத்துவதற்கு கவனத்தில் கொள்ளப்படுகின்ற எந்தவொரு அபிவிருத்திப் பிரேரணையிலும் தாக்கம் செலுத்தலாகாது.

(ஈ) மற்றும் உத்தேச அபிவிருத்தி நடவடிக்கைகள், பகுதியளவில் பிரதான வீதி அபிவிருத்திப் பிரதேசமொன்றில் அமைந்துள்ள சந்தர்ப்பத்தில், உரிய அதிகாரிகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல்வேண்டும்.

(உ) மற்றும் இடைக்கால அபிவிருத்தி அதிகாரிகளினால் எந்தவொரு நிபுணத்துவ அமைப்பு அல்லது திணைக்களத்துடனும் கலந்துரையாடிய பின்னர் முக்கியமான அல்லது அத்தியாவசியமான ஏற்புடையதான கருத்து தொடர்பில் ஆராய்தல் வேண்டும்.

12. கட்டளைச் சட்டத்தின் மற்றும் இக்கட்டளையில் உள்ளடங்கும் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இடைக்கால அபிவிருத்தி அதிகாரி ஒருவரினால் :

(அ) கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் யாராயினுமொரு விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியும் அல்லது நிராகரிக்கப்பட முடியும்.

(ஆ) குறித்த அனுமதிப்பத்திரம்வழங்கப்படுவது எவ்வாறான நிபந்தனைகளுக்கு உட்பட்டு என்பதை தீர்மானித்து அனுமதிப்பத்திரத்தில் குறிப்பாக குறித்துக் காட்டுதல் வேண்டும்.

13. கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் யாராயினுமொரு விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிப்பதற்கு இடைக்கால அபிவிருத்தி அதிகாரி மேற்கொள்ளும் ஒவ்வொரு தீர்மானமும் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், குறித்த தீர்மானம் எட்டப்பட்டமைக்கு காரணமான காரணிகள் யாவை என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

14. கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றைப் பெறும் ஒவ்வொரு ஆளும், குறித்த அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

15. இக்கட்டளையின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல விண்ணப்பப்படிவங்கள் பற்றிய பதிவேடொன்றை (இங்கு இதனகத்து "பதிவேடு" என்றழைக்கப்படுகின்ற ஒவ்வொரு இடைக்கால அபிவிருத்தி அதிகாரியும் பேணி வருதல் வேண்டும் என்பதுடன், குறித்த ஒவ்வொரு விண்ணப்பப்படிவம் தொடர்பிலும் பின்வரும் தகவல்களை குறித்த விண்ணப்பப்படிவ பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

(அ) விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி

(ஆ) விண்ணப்பப்படிவத்துடன் சம்பந்தப்பட்ட காணியின் பெயர் மற்றும் அமைவிடம்

(இ) சமர்ப்பித்துள்ள விண்ணப்பப்படிவத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி பற்றிய முழுமையான விபரம்

(ஈ) குறித்த இடைக்கால அபிவிருத்தி அதிகாரியினால் இக்கட்டளையின் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, மேற்படி விண்ணப்பப்படிவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது ஆட்களிடம் வினவி இருப்பின், குறித்த அதிகாரிகள் மற்றும் ஆட்களினால் செய்யப்பட்டுள்ள சிபாரிசுகள்.

(உ) விண்ணப்பப்படிவம் தொடர்பில் மேற்படி இடைக்கால அபிவிருத்தி அதிகாரியின் தீர்மானம்

(ஊ) விண்ணப்பதாரிக்கு உரிமப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பின், உரிமப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் இருப்பின், குறித்த நிபந்தனைகள்

16. இக்கட்டளையின்கீழ்அனுமதிப்பத்திரம்பெற்றுக்கொள்வதற்கு தம்மிடம் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கின்ற சகல ஆட்கள் தொடர்பிலும் அகராதி ஒழுங்கு வரிசையில் சூசிகை பத்திரமொன்றை ஒவ்வொரு இடைக்கால அபிவிருத்தி அதிகாரியும் பேணி வருதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் பதிவேட்டில் குறித்த விண்ணப்பப்படிவத்தின் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம் அல்லது பக்கங்களின் இலக்கங்களையும் அதில் உள்ளடக்குதல் வேண்டும்.

17. வீதிகள் தொடர்பாக காணி அபிவிருத்திக்கு இடைக்கால அபிவிருத்தி அதிகாரியினால் யாதாயினும் அனுமதிப்பத்திரம் வெளியிடப்படும் பட்சத்தில், குறித்த வீதியின் அமைவிடம் பற்றி அகராதி ஒழுங்குவரிசையில் தயார் செய்யப்பட்ட சூசிகை பத்திரத்தை ஒவ்வொரு இடைக்கால அபிவிருத்தி அதிகாரியும் பேணி வருதல் வேண்டும் என்பதுடன், அதில் வீதவரி இலக்கம் இருப்பின் அதுவும், குறித்த விண்ணப்பப்படிவத்தின் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பக்கத்தின் அல்லது பக்கங்களின் இலக்கங்களையும் உட்புகுத்துவதற்கு அல்லது உட்புகுத்த நடவடிக்கை மேற்கொள்ள செயற்படல் வேண்டும்.

18. இக்கட்டளையின் பதங்கள் தொடர்பில் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தினாலொழிய,-

(அ) ''அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு'' அல்லது ''ஒருங்கிணைப்புக் குழு'' என்பதனால் கருதப்படுவது கட்டளைச் சட்டத்தின் 4 (ஆ) பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவாகும்.

(ஆ) ''அபிவிருத்தி'' என்பதனால் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கோடல் கருதப்படும் என்பதுடன், அதன் இலக்கண ரீதியான வித்தியாசங்கள் மற்றும் சமமான வாக்கிய முறைகள் அவ்வாறே புரிந்து கௌ்ளப்படல் வேண்டும்.

(இ) ''அபிவிருத்தி பிரதேசம்'' என்பதனால் கருதப்படுவது கட்டளைச் சட்டத்தின் கீழ் அபிவிருத்திப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்படுகின்ற பிரதேசமொன்றாகும்.

(ஈ) யாதாயினுமொரு காணி தொடர்பிலான அபிவிருத்தி 'இடைக்கால அபிவிருத்தி' என்பதனால் கருதப்படுவது, மேற்படி காணி அமைந்துள்ள அபிவிருத்திப் பிரதேசம் அல்லது அதன் ஒரு பகுதிக்கு விரிவான திட்டமொன்றை தயார் செய்வதற்கு கட்டளைச் சட்டத்தின் கட்டளைகளை வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனம் செய்யும் திகதி முதல் ஆரம்பித்து, அவ்வாறே தயார் செய்யப்படுகின்ற திட்டங்கள் தத்துவமுள்ளதாகும் திகதிகள் நிறைவடையும் காலப்பகுதியாகும்.

(உ) ''உள்ளூர்அதிகாரசபை'' என்பதனால்,

(I) மாநகர சபை பிரதேசங்கள் தொடர்பில் பயன்படுத்தும் போது, குறித்த பிரதேசத்தின் மாநகர சபையும்,

(II) 1939 இன்61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பொருட்கோடலின் கீழ் கொள்ளப்படுகின்ற ஒரு நகரம் தொடர்பில் பயன்படுத்தும் போது, குறித்த நகர சபையும்,

(III) 1946 இன்3 ஆம் இலக்க பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் பொருட்கோடலின் கீழ் கொள்ளப்படுகின்ற ஒரு நகரம் தொடர்பில் பயன்படுத்தும் போது, 1987 இன்15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேச சபையும்,

(IV) கிராமப் பிரதேசம் தொடர்பில் பயன்படுத்தும் போது, 1987 இன்15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பிரதேச சபையும்,

(V) 'அமைச்சர்' என்பதனால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும்,

(VI) 'திட்டம்' என்பதனால் கட்டளைச் சட்டத்தின் கீழ் தயார் செய்யப்பட்டுள்ள எந்தவொரு திட்டமும்,

(VII) 'பிராந்திய திட்டமிடல் குழு' என்பதனால் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள, கிழக்கு மாகாண பிராந்திய திட்டமிடல் குழுவும்,

(VIII) 'கட்டளை' என்பதனால் இடைக்கால அபிவிருத்திக் கட்டளையும்,

(IX) 'அதிகாரி' என்பதனால் இடைக்கால அபிவிருத்தி அதிகாரியும் கருதப்படும்.

(X) 'திணைக்களம்' என்பதனால் கருதப்படுவது பாராளுமன்ற சட்டமொன்றின் ஏற்பாடுகளுக்கு அமைய தாபிக்கப்பட்ட மற்றும் அமைச்சரவை அமைச்சர் ஒருவரின், இராஜாங்க அமைச்சர் ஒருவரின் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரின் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற எந்தவொரு அரச திணைக்களம் அல்லது அதிகார சபை, சபை அல்லது கூட்டுத்தாபனம் என்பதாகும். கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கி வருகின்ற உள்ளூர் அதிகார சபைகள் உட்பட எந்தவொரு திணைக்களம் அல்லது நியாயாதிக்க அதிகார சபையும் இதில் உள்ளடங்கும்.

I ஆம் அட்டவணை

கிழக்கு மாகாணத்தின் பிராந்திய அபிவிருத்தி பிரதேசம் என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் எட்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன், 2270/11 ஆம் இலக்க 2022, மாச்சு 8 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுமான, பிரதேசம்.

II ஆம் அட்டவணை

அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி

(1) பின்வரும் அபிவிருத்தியொன்று தவிர யாதாயினுமொரு எழுத்து மூலமான சட்டத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள அபிவிருத்தி -

(அ) தற்போதுள்ள கட்டிடமொன்றை நிர்மாணித்தல், மீள் நிர்மாணித்தல் அல்லது விஸ்தரித்தல்

(ஆ) வீதிகளை நிர்மாணித்தல், விரிவாக்கம் செய்தல் அல்லது பிரிவிடல் மற்றும்

(இ) யாதாயினுமொரு காணியை, அதன் ஏதெனுமொரு பகுயை தனியான காணியொன்றாக மீண்டும் பிரிவிடல் அரச அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றினர் நிறைவேற்றப்படுகின்ற, இந்தக் கட்டளை அமுலுக்கு வருவது ஆரம்பிக்கும் திகதிக்கு முன்னதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு அபிவிருத்தி

(2) அரச அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றினர் நிறைவேற்றப்படுகின்ற, இந்தக் கட்டளை அமுலுக்கு வருவது ஆரம்பிக்கும் திகதிக்கு முன்னதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு அபிவிருத்தி.

(3) 2 ஆம் பந்தியில் நோக்கங்கள் தொடர்பில் யாதாயினுமொரு காணியின் அபிவிருத்திக்கு அனுமதி வழங்கப்பட்டதாக கருதப்படுவது -

(அ) யாதாயினுமொரு எழுத்து மூலமான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, அரசாங்கத்தினால் அல்லது உள்ளூர் அதிகார சபை ஒன்றினால் அபிவிருத்திக்கு யாதாயினும் விருப்பம், அங்கீகாரம் அல்லது அனுமதி மூலம் வழங்கப்பட்டிருப்பின், அல்லது

(ஆ) அபிவிருத்தி நோக்கங்களுக்காக மேற்படி காணியை கட்டாயமாக பயன்டுத்திக்கொள்ள அங்கீகாரம் வழங்கி அரச அல்லது உள்ளூர் அதிகார சபையினால் கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ள பட்சத்தில், அல்லது

(இ) குறித்த அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணியை ஒதுக்கிக் கொடுப்பதற்கு அல்லது குறித்த நோக்கத்துக்காக காணி கொள்ளலை மேற்கொள்ள அரசாங்கம்அல்லது உள்ளூர்அதிகாரசபையொன்றினால் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ள பட்சத்தில், அல்லது

(ஈ) குறித்த அபிவிருத்தி நோக்கங்களுக்காக நிதியை கடனாகப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு வகையில் அவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முடியாத நிதியை, குறித்த நோக்கத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பட்சத்தில், அல்லது

(உ) அபிவிருத்திக்கு உதவியாக யாதாயினும் கொடையை வழங்குவதற்கு அரசு அல்லது உள்ளூர் அதிகாரசபை யாதாயினும் வாக்குறுதியளித்துள்ள பட்சத்தில்,

ஆகிய சந்தர்ப்பங்களிலாகும்.

(4) காணப்படுகின்ற ஒரு கட்டிடத்தின் வெளித்தோற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அல்லது அதன்உபயோகத்தை மாற்றம் செய்வது தொடர்பில் அவசியமாகின்ற அல்லது மாற்றம் செய்தல் அல்லாத, குறித்த கட்டிடத்தின் பராமரிப்புக்கு அவசியமாகின்ற யாதாயினும் ஒரு மாற்றம் செய்தல், யாதாயினும் புதுப்பித்தல் அல்லது யாதாயினும் செயலை மேற்கொள்ளல்.

(5) 4 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக "காணப்படுகின்ற கட்டிடம்" என்பதனால் கருதப்படுவது இக்கட்டளை அமுல்படுத்தப்படும்போது, ஆரம்பிக்க முன்னர் முன்னர் இது ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட அல்லது கட்டியெழுப்பப்பட்ட அல்லது குறித்த கட்டளைச் சட்டத்தின் அல்லது இக்கட்டளையின் ஏற்பாடுகளை மீறாத வகையில்வேறு விதமாக நிர்மாணிக்கப்பட்ட அல்லது கட்டியெழுப்பப்பட்டதொரு கட்டிடம்.

(6) கட்டிடங்கள், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கல் அல்லது கொன்க்றீட், செங்கல் அல்லது உருக்கு பயன்படுத்தி வேறு கட்டமைப்பொன்றை நிர்மாணித்தல், மீள்நிர்மாணித்தல், மாற்றம் செய்தல் அல்லது விஸ்தரித்தல் தொடர்பில் ஏற்புடையதாகாத அபிவிருத்திகளான நீர், எரிவாயு அல்லது மின்சக்தியை வழங்குதல், மேம்படுத்தல் அல்லது பராமரிப்புச் செய்வது சம்பந்தமாக அவசியமாகின்ற அபிவிருத்திகள்-

(அ) நீர்ப்பாதைகள் அல்லது மேற்புற வடிகாலமைப்புக்களை வழங்குதல், பராமரிப்புச் செய்தல், மேம்படுத்தல்அல்லது புதுப்பித்தல் தொடர்பில் தேவையான அபிவிருத்தி

(ஆ) பொது மலசலகூடம் தவிர மலசலகூடங்கள் மற்றும் நீர் முத்திரையிடப்பட்ட மலசலகூடங்களை நிர்மாணித்தல் உட்பட மலசல கழிவகற்றல் மற்றும் நிலக் கீழ் நீர் விநியோகக் கட்டமைப்புக்களை பெற்றுக்கொடுத்தல், பராமரிப்புச் செய்தல், மேம்படுத்தல்அல்லது புதுப்பித்தல் தொடர்பில் அவசியமாகின்ற அபிவிருத்தி

(இ) யாதாயினுமொரு பூசை வைபவம் அல்லது உற்சவம் தொடர்பில் உபயோத்திற்காக நிரந்தரமான அல்லது தற்காலிகமான கட்டமைப்புக்களை நிர்மாணித்தல்.

(ஈ) வீதி, தெருக்கள் அல்லது வேறு பெருந்தெருக்களை மறுசீரமைப்புச் செய்தல், மேம்படுத்தல் அல்லது புதுப்பித்தல் தொடர்பில் அவசியமாகின்ற அபிவிருத்தி.

EOG *04-0119*